மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

அ.வ.எண். 82/2011 வா.சா. 1

பெயர் : வசந்தா த/பெ. : ஆறுமுகம்பிள்ளை

தாலுகா : நத்தம் கிராமம் : நத்தம், கோவில்பட்டி

தேதி : 05.01.2019 வயது : 57 /2019

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு.44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம் :-

**<u>2, 3 பிரதிவாதிகள் தரப்பில் கு.வி. :</u>** 3ம் பிரதிவாதி எனது உடன்பிறந்த அக்கா என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதியின் கணவர் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள நாங்கள் அனைவரும் மலேசியா நாட்டில் நிரந்தர குடியுரிமை பெற்றவர்கள் என்றால் சரிதான். நானும், எனது தாயார், 2ம் வாதி மகாலிங்கம் ஆகியோர் வைத்தியத்திற்காக தற்காலிக விசா பெற்று இங்கு தங்கியிருக்கிறோம் என்றால் சரியல்ல. எங்களுக்கு நிரந்தர விசா கிடைத்துவிட்டது. அந்த விபரம் குறித்து எனது நிரூபண வாக்கு மூலத்திலோ, வழக்கிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கிற்கு பின்பு எங்களுக்கு நிரந்தர விசா கிடைத்தது. ஒரு வருடம், அல்லது இரண்டு வருடம் இருக்கும். சரியான தேதி எனக்கு ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்கு மூலத்தில் நிரந்தரமாக மலேசியாவில் வசித்து வந்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அது கணிணி பிழையால் ஏற்பட்டிருக்கிறது. வழக்கு சொத்தை எனது தகப்பனார் கிரையம்பெற்றதாக சொல்லியிருக்கிறேன். அதற்குரிய அசல் கிரையப் பத்திரத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். அது எனது சகோதரி 2ம் பிரதிவாதி வசம் இருந்தது. 29-11-1960ம் தேதியில் கிரையம் வாங்கியதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அந்த தேதியிலும் எனது தகப்பனார் மலேசியாவில் நிரந்தர குடியுரிமை பெற்றவர் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை எனது தகப்பனார் நேரடியாக அனுபவிக்கவில்லை என்றால் சொந்தக்காரர்கள் மூலமாக அனுபவம் செய்து வந்தார். சபாபதி பிள்ளை மூலமாக அனுபவித்து வந்தார். அதற்கு முன்பு எனது தாத்தா வைத்தியலிங்கம்பிள்ளை பொறுப்பில் இருந்தது. சபாபதிபிள்ளையும், வைத்தியலிங்கம்பிள்ளையும் எவ்வளவு காலம் அந்த சொத்துக்களை பராமரித்து வந்தார்கள் என்ற விபரம் எனது தகப்பனாருக்குத்தான் தெரியும். எனக்கு நேரடியாகத் தெரியாது. சபாபதிபிள்ளையும், வைத்தியலிங்கம்பிள்ளையும் சொத்துக்களை அனுபவித்து வந்தார்கள் என்பதற்கு ஆவணங்கள் இல்லை. நான் சொல்வது போல் மேற்படி நபர்கள் யாரும் எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பா மலேசியாவில் 1984ல் இறந்தார். அதற்கு பின்பு இந்த சொத்துக்களை வாதிகளாகிய நாங்கள் நேரடியாக அனுபவிக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் எனது உறவினர் மூலமாக அனுபவித்தோம். அந்த உறவினர் யார் என்றால் எனது சகோதரர் சேகருக்குத்தான் தெரியும். மேற்படி விபரத்தை எனது நிரூபண வாக்கு மூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகள் மோசடியாக இந்த சொத்தை 04-10-1999ம் தேதியில் கிரையம் பெற்ற விபரம் கிரைய காலத்திலே எங்களுக்கு

தெரியும் என்றால் சரியல்ல. நாங்கள் இங்கு 2010ல் வந்தபோதுதான் அந்த கிரையம் குறித்து எனக்கு தெரியும். இடைப்பட்ட காலத்தில் எனது அண்ணன் சேகர் மூலமாக பராமரித்து வந்த நபரும் கிரையம் குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தைத் தவிர புன்னப்பட்டி கிராமத்தில் எங்களுக்கு ஒரு சொத்து இருந்தது என்றால் சரிதான். அந்த சொத்தை 3ம் பிரதிவாதி கிரையம் செய்திருந்தார் என்றால் சரிதான். அதை ஆட்சேபணை செய்து இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.94/2012 என்று கிரையம்பெற்ற மணி மீது வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் மணியிடம் நாங்கள் ஒரு தொகை பெற்றுக் கொண்டு வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டோம் என்றால் சரிதான். அவர் எங்களுக்குரிய உரிமையை ஒப்புக்கொண்டு தொகை கொடுத்ததால் நாங்கள் வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டோம். அந்த கிரைய விபரமும் எங்களுக்கு ஏற்கனவே தெரியும் என்றால் சரியல்ல. இங்கு வந்த பின்னர்தான் அந்த கிரையம் குறித்து தெரியும். இடையப்பட்டி கிராமத்தில் செந்தில்குமார் என்பவர் கிரையம் வாங்கியிருந்தார் என்றால் சரிதான். அந்த சொத்தை விற்பதற்கு எனது அம்மா 3ம் பிரதிவாதிக்கு பவர் கொடுத்து அதனடிப்படையில் விற்பனை செய்து அதில் பாதி பணத்தை எங்களிடம் ஒப்படைக்கவில்லை. எனது அக்கா குடியிருக்கும் வீடு சம்பந்தமாக எங்களுக்கும், 3ம் பிரதிவாதிக்கும் ஒரு கருத்து வேறுபாடு ஏற்பட்டு எனது சகோதரி அ.வ.எண்.36/2010 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த பிரச்சனையின் அடிப்படையில்தான் இந்த வழக்கையும் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் தவறு. வழக்கு சொத்து என்பது 3ம் பிரதிவாதியின் அனுபவத்தில் திருமணமான காலத்திலிருந்தே இருந்து வந்தது என்றால் தவறு. எனது தகப்பனார் இறந்த காலத்திற்கு பின்பு இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை வழக்கு சொத்து சம்பந்தமாக எங்களது உரிமையை நிலைநாட்ட எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தில் எங்களுக்கு ஏதேனும் உரிமை இருந்தாலும்கூட அது சட்டப்படி நசிந்துவிட்டது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் காலத்திற்கு பின்பு வழக்கு தாக்கல் செய்யும் தேதி வரைக்கும் நாங்கள் சொத்தில் அனுபவத்தில் இருந்ததற்கான எந்த ஆவணங்களும் இல்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் நாங்கள்தான் அனுபவித்து வந்தோம். மலேசியாவில் இருந்து இந்தியாவிற்கு 2009ம் ஆண்டு வரும் வரை நாங்கள் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. குத்தகைக்கு விட்டு அனுபவித்து வந்தோம். எங்களது அண்ணன் சேகருக்குதான் தெரியும். இந்த வழக்கில் எங்களது அண்ணன் சேகரை விசாரிக்க தயாராக இருக்கிறோமா என்றால் அவர் மலேசியாவில் இருக்கிறார். தற்பொழுது 1ம் பிரதிவாதி பெரியாண்டி வசம் இல்லை என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் நன்றாக தெரியும். அந்த சொத்தை பெரியாண்டி தனது மகன்களுக்கு தானம் எழுதிக் கொடுத்து அவர்களும் கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்ற விபரமும் எனக்கு தெரியும். இந்த விபரங்கள் அனைத்தும் எனக்கு 2013ம் ஆண்டு பத்திரங்கள் எழுதப்பட்டபோது தெரியும். அவ்வாறு தெரிந்தவுடன் கிரையம் பெற்ற 7 முதல் 9 பிரதிவாதிகளிடம் ஆட்சேபணை சொல்லவில்லை என்றால் சரிதான். தாலுகா ஆபிசில்

ஆட்சேபணை செய்தேன். 7 முதல் 9 பிரதிவாதிகள் கிரையம் சம்பந்தமாக வட்டாட்சியர் அலுவலகத்தில் செய்த ஆட்சேபணையின் நகல்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேவைப்படும்போது தாக்கல் செய்வேன். எனக்கு 7 முதல் 9 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற விபரம் தெரிந்தும் சட்ட காலத்திற்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்காததால் அந்த பத்திரங்கள் சம்பந்தமாக நாங்கள் கேட்டுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகளில் எங்களுக்கும் பாகம் இருக்கிறது என்று சொல்லிதான் வாதாடுகிறேன் என்றால் சரிதான். வாதிகளான எங்களுக்கும், 3ம் பிரதிவாதிக்கும் தலா ஒரு பாகம் இருப்பதாகத்தான் எங்களுடைய வாதம் என்றால் சரிதான். அவ்வாறான நிலையில் நாங்கள் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யாமல் விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால்சரியல்ல. வழக்கு சொத்து எந்த காலத்திலும் எங்களுடைய அனுபவத்தில் இல்லாததால் நாங்கள் கேட்டுள்ள உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நாங்கள் யார் மூலமாக அனுபவம் செய்தோம் என்ற விபரங்களை வழக்கிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சொல்லாத நிலையில் தற்பொழுது சாட்சியத்தில் பொய்யாக அனுபவம் செய்து வருவதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து நீண்ட கால அனுபவமாக 3ம் பிரதிவாதி வசம் இருந்தது என்றும், அதனடிப்படையில் அவர் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரையம் செல்லும் என்றால் சரியல்ல. நாங்கள் காலம் கடந்து கேட்டுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் சட்டப்படியான உரிமை எதுவும் எங்களுக்கு இல்லை என்றால் சரியல்ல.

4 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் **05-01-2019** கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.